**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.ப.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப.,**

**ந.க.எண்.1377/2019/டி2** **நாள்.02.05.2023**

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் இருந்த நுழைவுப் பணியிடங்களில் (Entry Level Posts) பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் – கல்வித் தகுதியின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட பேரூராட்சி அலகில் பணிபுரிந்து வந்த மூன்று நபர்களை இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் இணைந்து ஓராண்டு நிறைவு செய்தது – இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியில் வரன்முறை செய்து ஆணை ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1) அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.05.1999.
2) அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள். 31.05.2019.
3) சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.984/2013/அ3, நாள். 28.11.2019 மற்றும் 23.08.2021.
4) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1337/2019–சிவ/டி2, நாள். 04.12.2019.
5) தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்.
6) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை அவர்களின் கடிதம் ந.க.எண். 360/பேரூ.1/2023–4, நாள். 08.03.2023.
7) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை:**

பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி பேரூராட்சிகளில் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களான பதிவறை எழுத்தர், தூய்மை மேற்பார்வையாளர், அலுவலக உதவியாளர், இரவு காவலர் ஆகிய பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை அவர்களின் கல்வித்தகுதியின் அடிப்படையில் சிறப்பினம் நிகழ்வாக ஒருமுறை மட்டும் (Onetime Consideration) தனியர்கள் கீழ்நிலை பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் கருத்தியலாக நியமனம் செய்து ஈர்த்துக்கொள்ள பார்வை 2–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3–ல் காணும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, இராமநாதபுரம் மாவட்ட பேரூராட்சி அலகில் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களில் பணிபுரிந்து வந்த கீழ்காணும் அட்டவணை 1–இல் கண்டுள்ள பணியாளர்களை சிவகங்கை மாவட்ட பேரூராட்சி அலகில் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பார்வை 4–இல் காணும் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி முற்றிலும் தற்காலிகமாக நிபந்தனைகளுக்குட்பட்டு 02.06.2001 முதல் முன்தேதியிட்டு கருத்தியலாக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

..2..

அட்டவணை – 1

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம் (திருவாளர்கள்) | வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்ட அலுவலகம் |
|---|---|---|
| 1 | பா. அழகர்சாமி,<br>பதிவறை எழுத்தர்,<br>கமுதி பேரூராட்சி,<br>இராமநாதபுரம் மாவட்டம். | வரித்தண்டலர்,<br>சிங்கம்புணரி பேரூராட்சி,<br>சிவகங்கை மாவட்டம். |
| 2 | தொ. நாகராஜ்,<br>இரவு காவலர்,<br>தொண்டி பேரூராட்சி,<br>இராமநாதபுரம் மாவட்டம். | வரித்தண்டலர்,<br>கண்டனூர் பேரூராட்சி,<br>சிவகங்கை மாவட்டம். |
| 3 | சொ. பூங்கோதை,<br>இரவு காவலர்,<br>அபிராமம் பேரூராட்சி,<br>இராமநாதபுரம் மாவட்டம். | வரித்தண்டலர்,<br>கோட்டையூர் பேரூராட்சி,<br>சிவகங்கை மாவட்டம். |

மேலும், மேற்படி பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்ட பணியிடத்தில் 04.12.2019 முற்பகல் முதல் பணியில் இணைந்து பணிபுரிந்து வந்த நிலையில், வ.எண்.1–இல் கண்டுள்ள பணியாளர் விருப்பத்தின்பேரில் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1538/2022/டி2, நாள். 20.06.2022–இன்படி இளநிலை உதவியாளராகவும், வ.எண்.2–இல் கண்டுள்ள பணியாளர் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1138/2020/டி2, நாள்.08.06.2020–இன்படி திருப்புவனம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகவும் பணியில் இணைந்து ஓராண்டு பணியினை நிறைவு செய்துள்ளார்கள்.

இந்நிலையில், பார்வை 6–இல் காணும் அரசு கடிதத்தில் மேற்படி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு 02.06.2001–இல் உரிய நியமன அலுவலரால் (Appointing Authority) வரன்முறைப்படுத்துவதுடன், தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 2

| வ. எண் | மாவட்டம் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணி நியமன நாள் | பணி வரன்முறை செய்திடும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | சிவகங்கை | பா. அழகர்சாமி,<br>இளநிலை உதவியாளர்,<br>சிங்கம்புணரி பேரூராட்சி. | 02.06.2001 முற்பகல் | 02.06.2001 முற்பகல் |
| 2 | | தொ. நாகராஜ்,<br>இளநிலை உதவியாளர்,<br>திருப்புவனம் பேரூராட்சி. | 02.06.2001 முற்பகல் | 02.06.2001 முற்பகல் |
| 3 | | சொ. பூங்கோதை,<br>வரித்தண்டலர்,<br>கோட்டையூர் பேரூராட்சி. | 02.06.2001 முற்பகல் | 02.06.2001 முற்பகல் |

அதன்படி அட்டவணை 2–இல் காணும் பணியாளர்களின் பணியினை சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021–க்கும் / பார்வை ஒன்றில் கண்ட அரசாணைக்கும் எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியில் கலம் 5–இல் கண்டுள்ளவாறு வரன்முறை செய்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
சிவகங்கை மாவட்டம்.

பெறுநர்

தொடர்புடைய பணியாளர்கள் (செயல் அலுவலர் வழியாக)

நகல்: பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 28 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: செயல் அலுவலர், சிங்கம்புணரி பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.
நகல்: செயல் அலுவலர், திருப்புவனம் பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.
நகல்: செயல் அலுவலர், கோட்டையூர் பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.